ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1824/21 - 2013 අගෝස්තු 22 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.08.22

*1824/21 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 22 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.- பீ. 21/78* (viii)

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*137 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 70 ஆ என்னும் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட அதிகாரியாகவிருக்கின்றவரான, உயர் கல்வி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70 இ மற்றும் 70 ஈ என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான சட்டத்தின் 137 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள்.*

செயலாளர்,<br>
உயர்கல்வி அமைச்சு,<br>
குறித்துரைக்கப்பட்ட அதிகாரி.

கொழும்பு.

#### விதிகள்

1. இவ்விதிகள் 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, குறித்துரைக்கப்பட்ட அதிகாரி (நிறுவகங்களை பட்டம் வழங்கும் நிறுவனங்களாக ஏற்று அங்கீகரிப்பது தொடர்பான தத்துவங்கள்) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இந்த விதிகளுக்கான I ஆம் அட்டவணையிலும் II ஆம் அட்டவணையிலும் தரப்பட்ட வழிகாட்டு நெறிகள் ஆனவை ஏதேனும் அரச அல்லது அரச சார்பற்ற நிறுவகத்தினை பட்டம் வழங்கும் நிறுவகம் ஒன்றாக ஏற்று அங்கீகரிப்பதற்கும் மற்றும் அத்தகைய நிறுவகத்தினால் பட்டம் அல்லது பட்டங்கள் வழங்குவதற்கான தத்துவத்தினைப் பெற்றுக் கொள்வதற்கும் ஏற்புடையற்பாலதாதல் வேண்டும்.

3. குறித்துரைக்கப்பட்ட அதிகாரி அமைச்சரின் அங்கீகாரத்துடன் அவர் அவசியமெனக் கருதுகின்றவாறு இவ்விதிகளில் குறித்துரைக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதில் அவருக்கு உதவி வழங்கும் நோக்கத்திற்காக (இதனகத்துப்பின்னர் "SCAQA"' எனக் குறிப்பீடு செய்யப்படும்) தராதர அங்கீகாரம் மற்றும் தர உறுதிப்பாடு பற்றிய நிலையியற் குழுவிற்கும், நிறுவனம்சார் மீளாய்வுக் குழாத்திற்கும் மற்றும் விடயம்சார் மீளாய்வுக் குழாத்திற்கும் மேலதிகமாக அத்தகைய எண்ணிக்கையான நிலையியற் குழுக்களை நியமித்தல் வேண்டும்.

4. தராதர அங்கீகாரம் மற்றும் தர உறுதிப்பாடு பற்றிய நிலையியற் குழு, நிறுவனம்சார் மீளாய்வுக் குழாம் மற்றும் விடயம்சார் மீளாய்வுக் குழாம் என்பன இவ்விதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்க அவற்றிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களைக் கருத்திற்கொள்வதில், அத்தகைய குழு மற்றும் குழாம்கள் என்பவற்றிற்கு அத்தகைய விதிகளின் கீழ்க் குறித்தளிக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

5. “SCAQA”, நிறுவனம்சார் மீளாய்வுக் குழாம் மற்றும் விடயம்சார் மீளாய்வுக் குழாம் என்பன பட்டம் வழங்கும் நிறுவகங்களாக ஏற்று அங்கீகரிக்கப்படுவதற்கான உட்கருத்தைக் கொண்டிருக்கின்ற நிறுவகங்களின் தராதர அங்கீகாரப் பணி மற்றும் அவற்றின் தர உறுதிப்பாடு பற்றிய பணி என்பனவற்றை நிறைவேற்றுவதில் குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு உதவுதல் வேண்டும் என்பதுடன், அதன் விளைவைக் குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு அறிக்கையிடச் செய்வித்தலும் வேண்டும்.

6. குறித்துரைக்கப்பட்ட அதிகாரியானவர் மீளாய்வின் கீழ் உள்ள விண்ணப்பத்தின் உள்ளடக்கங்களைக் கருத்திற்கொண்டு, காலத்திற்குக் காலம், “SCAQA” மற்றும் மீளாய்வுக் குழாம்களின் உறுப்பாண்மையை மாற்றலாம்.

7. பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றாக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் பட்டம் அல்லது பட்டங்களை அளிப்பதற்கான தத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்குமான உட்கருத்தைக் கொண்டதுமான ஏதேனும் நிறுவகம் (இது இதனகத்துப்பின்னர் “விண்ணப்பதாரர்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியிடம், நிறுவனம்சார் மீளாய்வுத் தேவைப்பாடுகள் மற்றும் விடயம்சார் மீளாய்வுத் தேவைப்பாடுகள் தொடர்பில் முறையே இவ்விதிகளிற்கான I ஆம் மற்றும் III ஆம் அட்டவணையில் தரப்பட்டவாறான வழிகாட்டு நெறிகளில் கொடுக்கப்பட்ட விபரங்களைக் கொண்டுள்ள பாகம் I, பாகம் II என்பவற்றை உள்ளடக்கியதான இரண்டு பாகத்திலான விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. விண்ணப்பதாரர், அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பமானது உண்மையானதும் சரியானதுமான தகவலைக் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

9. குறித்துரைக்கப்பட்ட அதிகாரியானவர் இவ்விதிகளின் ஏற்பாடுகளுடன் ஒத்திசையாகாதிருக்கின்ற, ஏதேனும் விண்ணப்பத்தை அதற்கான காரணத்தைக் குறிப்பிட்டு, பதிவுத் தபால் மூலம் விண்ணப்பதாரருக்குத் திருப்பி அனுப்புதல் வேண்டும்.

பாகம் I

பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றாக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்கும் மற்றும் பட்டம் அல்லது பட்டங்களை வழங்குவதற்கான தத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்குமான விண்ணப்பம்

**நிறுவனம்சார் மீளாய்வு**

10. விண்ணப்பத்தின் பாகம் I ஆனது இவ்விதிகளிற்கான I ஆம் அட்டவணையில் தரப்பட்ட வழிகாட்டு நெறிகளுடன் ஒத்திசைவானதாகவிருக்கின்றதென திருப்திப்பட்டதன் மேல் குறித்துரைக்கப்பட்ட அதிகாரி, அதனது விதப்புரைக்காக ‘SCAQA’ விற்கு அதனை ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

11. இப்பாகத்தின் அடுத்துவருகின்ற ஏற்பாடுகளின் நியதிகளின்படி விண்ணப்பங்களின் மதிப்பீடானது, இவ்விதிகளுக்கான I ஆம் அட்டவணையில் தரப்பட்ட வழிகாட்டு நெறிகளில் குறித்துரைக்கப்பட்ட ஆறு ஆக்கக் கூறுகள் தொடர்பில் நிறுவனம்சார் மீளாய்வுக் கட்டளைக்கற்கைகள் மற்றும் நியமங்களைப் பூர்த்தி செய்வதற்கான நிறுவகத்தின் ஆற்றலின் தரத்தினைப் பரிசோதனை செய்வதனை நோக்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

12. விண்ணப்பதாரர் தேவைப்பட்ட தகவல் யாவற்றையும் வழங்கியுள்ளார் என்பதையும் அது இவ்விதிகளில் தரப்பட்ட கட்டளைக்கற்கைகள் மற்றும் நியமங்களைத் திருப்திப்படுத்தியுள்ளது என்பதையும் உறுதிப்படுத்துவதற்கு விண்ணப்பத்தின் பாகம் I இனை ‘SCAQA’ ஆனது கூர்ந்தாராய்தல் வேண்டும்.

13. ‘SCAQA’ ஆனது, மதிப்பீட்டுச் செய்முறையின் போது, போதுமானதல்லாத தகவலுடன் கூடிய பூர்த்தி செய்யப்படாத ஏதேனும் விண்ணப்பத்தை, அதற்கான காரணங்களைக் கொடுத்து குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்குத் திருப்பி அனுப்புதல் வேண்டும் என்பதுடன், குறித்துரைக்கப்பட்ட அதிகாரியானவர் ‘SCAQA’ வினால் கொடுக்கப்பட்ட காரணங்கள் பற்றித் திருப்திப்படுவதன் மேல், விண்ணப்பதாரருக்கு அத்தகைய விண்ணப்பத்தை அதற்கான காரணங்களைக் கொடுத்து இலங்கையிலுள்ள விண்ணப்பதாரியினுடைய முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் திருப்பி அனுப்புதல் வேண்டும்.

14. விண்ணப்பதாரர், அத்தகைய திருப்பி அனுப்பும் திகதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதியினுள் இவ்விதிகளுக்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்ட வழிகாட்டு நெறிகளின் தேவைப்பாடுகளுக்கு இணங்கத் தேவைப்படும் தகவலுடன் சேர்த்து குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு விண்ணப்பத்தை மீளச் சமர்ப்பிக்கலாம் என்பதுடன், குறித்துரைக்கப்பட்ட அதிகாரியானவர், மீளச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தை மீளவும் கருத்திற்கெடுப்பதற்காக ‘SCAQA’ விற்கு அனுப்புதலும் வேண்டும்.

15. 14 ஆம் விதியின் கீழ்த் திருப்பி அனுப்பப்பட்ட விண்ணப்பத்தை மீளச் சமர்ப்பிப்பதற்காக மேலதிகக் காலப்பகுதி ஒன்றை விண்ணப்பதாரர் வேண்டலாம் என்பதுடன், குறித்துரைக்கப்பட்ட அதிகாரியானவர், விண்ணப்பத்தை மீளச் சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பதாரியினால் நிறைவேற்றப்படவேண்டிய செயற்பாடுகளின் தன்மையைக் கருத்திற்கொண்டு, அத்தகைய கால நீடிப்பை வழங்கலாம்.

16. 'SCAQA' ஆனது, அதனது ஆய்வுகளின் அடிப்படையில் 10 ஆம் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட விண்ணப்பம் அல்லது 14 ஆம் விதிகளின் கீழ் மீளச் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் தொடர்பில் அதனது கண்டுபிடிப்புக்கள், அவதானிப்புக்கள் மற்றும் விதப்புரைகள் உள்ளடங்கலாக அறிக்கை ஒன்றைக் குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

## பாகம் II

## விடய மீளாய்வு, தராதர அங்கீகாரம் மற்றும் தர உறுதிப்பாடு

17. குறித்துரைக்கப்பட்ட அதிகாரியானவர், 16 ஆம் விதியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு விண்ணப்பத்தின் பாகம் I பற்றிய அறிக்கையை பெற்றுக் கொண்டதன் மேலும் மற்றும் விண்ணப்பத்தின் பாகம் II ஆனது இவ்விதிகளுக்கான அட்டவணையில் தரப்பட்ட வழிகாட்டு நெறிகளுடன் இசைந்தொழுகுகின்றதென திருப்திப்படுவதன் மேலும், 'SCAQA' இற்கு விண்ணபத்தின் சொல்லப்பட்ட பாகம் II ஐ அதனது விதப்புரைகளுக்காக ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

18. 'SCAQA' ஆனது, விண்ணப்பதாரரின் நிறுவகத்தின் ஆற்றலை மதிப்பீடு செய்வதில், விண்ணப்பதாரர் இவ்விதிகளுக்கான II ஆம் அட்டவணையில் தரப்பட்ட வழிகாட்டு நெறிகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆறு ஆக்கக்கூறுகளைப் பூர்த்தி செய்துள்ளாரா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

19. 'SCAQA' ஆனது, ஏதேனும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பத்தை அல்லது போதிய தகவலைக் கொண்டிராத விண்ணப்பத்தை அதற்கான காரணங்களைக் கொடுத்து குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்குத் திருப்பி அனுப்புதல் வேண்டும் என்பதுடன், குறித்துரைக்கப்பட்ட அதிகாரியானவர் 'SCAQA' இனால் கொடுக்கப்பட்ட காரணங்களுடன் திருப்திப்படுவதன் மேல், அதற்கான காரணங்களைக் கொடுத்து இலங்கையிலுள்ள விண்ணப்பதாரருடைய முகவரிக்குப் பதிவுத் தபாலில் அத்தகைய விண்ணப்பத்தை திருப்பியனுப்புதல் வேண்டும்.

20. விண்ணப்பதாரரானவர், விண்ணப்பத்தை தேவைப்படுத்தப்பட்ட தகவலுடனும் இவ்விதிகளிற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கவும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு அத்தகைய திருப்பி அனுப்பப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதக் காலப்பகுதி ஒன்றிற்குள் மீளச் சமர்ப்பிக்கலாம்.

21. விண்ணப்பதாரர், விண்ணப்பத்தை மீளச் சமர்ப்பிப்பதற்கு மேலதிக காலப்பகுதி ஒன்றை வேண்டலாம் என்பதுடன், குறித்துரைக்கப்பட்ட அதிகாரியானவர், விண்ணப்பத்தை மீளச் சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பதாரரினால் புரியப்படவேண்டிய செயற்பாடுகளின் தன்மையைக் கருத்திற் கொண்டு அத்தகைய கால நீடிப்பை வழங்கலாம்.

22. குறித்துரைக்கப்பட்ட அதிகாரியானவர், மீளச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தை மீளவும் கவனத்திற் கொள்வதென 'SCAQA' விற்கு அனுப்புதல் வேண்டும்.

23. 'SCAQA' ஆனது மேலேயுள்ளவாறு மீளச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் உள்ளடங்கலாக விண்ணப்பத்தின் சொல்லப்பட்ட பாகம் II ஐ விபரமாகக் கூர்ந்தாராய்ந்து மதிப்பீடு செய்வதன் மேலும் அத்துடன் சொல்லப்பட்ட விண்ணப்பமானது இவ்விதிகளிற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு எதிர்பார்க்கப்பட்ட பட்டம் தொடர்பான ஆக்கக் கூறுகளைக் கொண்டுள்ளது எனத் திருப்திப்படுவதன் மேலும் அதனுடைய கண்டுபிடிப்புக்கள், அவதானிப்புக்கள் மற்றும் விதப்புரைகள் உள்ளடங்கலாக குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

## பாகம் III

## மீளாய்வுக் குழாம்களினால் மதிப்பீடு செய்யப்படுதல்

24. குறித்துரைக்கப்பட்ட அதிகாரியானவர், கீழே தரப்பட்ட முறையில் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட, 3 ஆம் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட நிறுவனம்சார் மீளாய்வு குழாம் மற்றும் விடயம்சார் மீளாய்வுக் குழாம் என்பவற்றிற்கு இவ்விதிகளின் பாகம் I மற்றும் பாகம் II இன் கீழ்ப் பெறப்பட்ட இரண்டு பாகம் கொண்ட விண்ணப்பத்தை அனுப்பிவைத்தல் வேண்டும்.

25. நிறுவனம்சார் மீளாய்வுக் குழாம் மற்றும் விடயம்சார் மீளாய்வுக் குழாம் என்பன நிறுவனம்சார் மீளாய்வு, விடயம்சார் மீளாய்வு பற்றிய சிறப்பு அறிஞர்களையும், இயைபான நிறுவனத்தினால் முனையப்பட்ட உயர்தொழில் சார் பட்டங்கள் தொடர்பாக விசேடித்த அறிவைக் கொண்டுள்ள உயர்தொழில் சார் குழுக்களிடமிருந்து பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்களையும், பல்கலைக்கழக முறைமையின் சிரேஷ்ட கல்விசார் பணியாட்டொகுதியிலிருந்து பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்களையும் மற்றும் அத்தகைய நிறுவகத்தினால் முனையப்பட்ட பட்டங்களுக்கு இயைபாக உள்ள உயர்தொழில்சார் குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு இயைபான துறையில் விசேடித்தவரான வேறு எவரேனும் ஆளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

26. சொல்லப்பட்ட குழாம்கள், விண்ணப்பதாரியினால் இவ்விதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறு வழங்கப்பட்ட தகவலைச் சரி பார்ப்பதற்காகவும், கிடைக்கக்கூடிய எல்லா வசதிகளையும் மற்றும் வேறு எல்லா ஆக்கக் கூறுகளையும் பௌதீக ரீதியாகப் பரிசோதனை செய்வதற்குமென, சூழ்நிலைகளில் தேவைப்படுத்தப்படக்கூடியவாறு ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வருகை தருதல்களைச் செய்தல் வேண்டுமென்பதுடன், அதன் மேல் குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு அத்தகைய குழாம்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

27. குறித்துரைக்கப்பட்ட அதிகாரியானவர், விண்ணப்பத்தின் ஆய்வின்போது மீளாய்வுக் குழாம்களினால் நிறைவேற்றப்பட்ட அமைவிட வருகை தருதல்களினதும் அல்லது வேறு ஏதேனும் பரிசோதனைகளினதும் அடிப்படையில் அத்தகைய குழாம்களினால் அறிக்கையிடப்படக் கூடியவாறு, விண்ணப்பம் தொடர்பான அமைவிடத்திற்கு மேலதிகச் சீராக்கங்களைச் செய்யுமாறு விண்ணப்பதாரருக்கு அறிவிக்கலாம்.

28. குறித்துரைக்கப்பட்ட அதிகாரியானவர், விண்ணப்பதாரருடைய வேண்டுதலைக் கவனத்திற் கொண்டு, இயைபான விண்ணப்பத்தின் கீழ் விண்ணப்பதாரி எந்தக் குறித்த காலப்பகுதியினுள் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றாரோ அந்தக் குறித்த காலப்பகுதியினைத் தீர்மானிக்கலாம்.

29. குறித்துரைக்கப்பட்ட அதிகாரியானவர், விண்ணப்பத்தின் பாகம் I தொடர்பில் நிறுவனம் சார் மீளாய்வுக் குழாமினாலும் விண்ணப்பத்தின் பாகம் II தொடர்பில் விடயம்சார் மீளாய்வுக் குழாமினாலும் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் இச்சட்டத்தின் 70 இ என்னும் பிரிவின் நியதிகளின்படி அமைச்சருக்கு அவருடைய அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

30. அமைச்சரானவர், சொல்லப்பட்ட அறிக்கையைப் பெற்றுக் கொண்டதன் மேல் அத்தகைய விண்ணப்பத்தின் மீதான அவருடைய தீர்மானத்தைக் குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு அறிவித்தல் வேண்டும்.

31. இச்சட்டத்தின் 70 இ என்னும் பிரிவின் கீழ்க் குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அமைச்சருக்குச் செய்யப்பட்ட அறிக்கையைப் பின்பற்றி, பட்டம் வழங்கும் நிறுவனங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதும் மருத்துவத்துறையில், பொறியியல் துறையில், கட்டடக் கலையில் மற்றும் அதே போன்ற வேறு உயர்தொழில்சார் பட்டங்களை வழங்கும் கற்கை நிகழ்ச்சித்திட்டங்களை முனைகின்றதுமான அரச சார்பற்ற எல்லா நிறுவகங்களும் இயைபான குறித்துரைக்கப்பட்ட உயர்தொழில்சார் குழுவிடமிருந்து இணங்கியொழுகுதற் சான்றுப்படுத்துகையைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் என்பதுடன், குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு அத்தகைய சான்றுப்படுத்துகையைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

32. அமைச்சரின் பணிப்புரைக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியானவர், காலத்திற்குக் காலம், இவ்விதிகளில் தரப்பட்ட நியமங்கள் பேணப்படுகின்றமையை உறுதிப்படுத்துவதற்கென, அந்நோக்கத்திற்காகத் தாபிக்கப்பட்ட தர உறுப்பாட்டுக் கண்காணிப்பு முறைமை ஒன்றின் ஊடாக அத்தகைய ஏதேனும் பட்டம் வழங்கும் நிறுவகத்தின் செயலாற்றுகையைப் பரிசோதனை செய்தல் வேண்டும்.

33. ஏதேனும் வார நாளின் வேலை மணித்தியாலங்களின் போது நிறுவனத்தைப் பார்வையிடுவதற்கு குறித்துரைக்கப்பட்ட அதிகாரியை அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியை அனுமதித்தலும் மற்றும் அவசியமான எல்லாத் தகவலையும், ஆவணங்களையும் மற்றும் தர உறுதிப்பாட்டைக் காண்காணிக்கும் நோக்கத்திற்கு அவசியமான வேறு சான்றுகளையும் கேட்கின்றவிடத்து, கொடுத்துதவுதலும் பட்டம் வழங்கும் நிறுவகத்தின் கடமையாதல் வேண்டும்.

34. குறித்துரைக்கப்பட்ட அதிகாரி, அமைச்சரின் பணிப்புரைக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, அத்தகைய தர உறுதிப்பாட்டுக் கண்காணிப்பு அறிக்கையின் அடிப்படையில் பட்டம் வழங்கும் அந்தஸ்தின் முறைமையான நியமங்களைப் பேணுவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஏதேனும் பட்டம் வழங்கும் நிறுவனத்திற்கு அறிவிக்கலாம்.

35. இவ்விதிகளில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி:-

"சட்டம்" என்பது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம் எனப் பொருள்படும்;

"அமைச்சர்" என்பது எந்த அமைச்சருக்கு உயர் கல்வி என்னும் விடயம் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சர் எனப் பொருள்படும்;

"குறித்துரைக்கப்பட்ட அதிகாரி" என்பது 2012 பெப்புருவரி 22 ஆந் திகதிய 1746/11 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அத்தகைய குறித்துரைக்கப்பட்ட அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளவரான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் எனப் பொருள்படும்.

"குறித்துரைக்கப்பட்ட உயர்தொழில்சார் குழு" என்பது குறிப்பிட்ட கற்கைத் துறை அல்லது உயர்தொழில் ஒன்றில் அறிவு மற்றும் தகைமைகளைக் கொண்ட ஆட்களை உள்ளடக்கியுள்ள பாராளுமன்றத்தின் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கழகம் அல்லது நிறுவனம் எனப் பொருள்படும்.

## அட்டவணை I

நிறுவனம்சார் மீளாய்வுக்கான வழிகாட்டு நெறிகள்

| நிரல் I<br>செயற்பாட்டு இடப்பரப்பின் விவரணம் | நிரல் II<br>தேவைப்படுத்தப்பட்ட சான்றை/தகவலை இனங்காணல் |
|---|---|
| 1. **ஆட்சி** - ஆளுநர்கள் சபை ஒன்று அல்லது முகாமைச் சபை, கல்விசார் ஆட்சிக்குழு (அல்லது செனற்) பீடச் சபைகள், கல்வி சார் திணைக்களங்கள் மற்றும் நிலையங்கள்/அலகுகள் போன்ற தெளிவாக வரையறுக்கப்பட்ட அதிகார வரிசையுடனான ஆட்சிக் கட்டமைப்பு ஒன்று இருத்தல் வேண்டும். அத்தகைய குழுக்களின் அமைப்பும் பணிகளும் தெளிவாக வரையறுக்கப் பட்டிருத்தல் வேண்டும். மேலும் நிர்வாக, கல்வி சார், மற்றும் நிதிகள் விடயங்களுக்குப் பொறுப்பாக உள்ளவர்கள் (அதாவது, பிரதான நிறைவேற்று அலுவலர், பீடாதிபதி, பகுதிகளின் தலைவர்கள், பதிவாளர், காசாளர், ஆகியோர்) சம்பந்தப்பட்ட இயைபான அலுவலர்களின் பங்களிப்புக்களும் பொறுப்புக்களும் இனங்காணப்பட்டுத் தெளிவாகக் கூறப்பட்டிருத்தல் வேண்டும். | (அ) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ்/1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழான கம்பெனிப் பதிவு.<br>(ஆ) கம்பெனியின் அமைப்புப் புறவிதி.<br>(இ) ஆட்சியமைப்பு.<br>(ஈ) ஆளுநர் சபைகளின்/கல்விசார் சபைகளின் உறுப்பினர் களின் விபரங்கள்<br>(உ) ஆளுநர் சபை/கல்விசார் சபை என்பவற்றின் கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புக்கள். (அமைவிட வருகை தருகையின் போது பரிசோதிக்கப்படுதல் வேண்டும்.)<br>(ஊ) விடயத்திற்கேற்ப, கம்பெனிகள்/முதலீட்டுச் சபைகள் என்பவற்றின் பதிவாளருக்கான கம்பெனிப் பணிப்பாளர் களது ஆண்டு வெளிப்படுத்துகைகள்.<br>(எ) அலுவலகக் கடிதங்கள் வழங்கப்படக்கூடிய, அல்லது நிறுவகத்தின் அலுவலக ரீதியான அஞ்சல், இணையத்தளம் மற்றும் மின் அஞ்சல் முகவரி.<br>(ஏ) ஆட்சிக்கு இயைபாக இருக்கக் கூடியவாறான வேறு ஏதேனும் சான்று/ஆவணம். |
| 2. **முகாமை**-பட்டம் வழங்கும் நிறுவகம் ஒன்றின் முகாமை யானது, முகாமை நடவடிக்கை முறைக்கு இணங்க முகாமையின் ஆளுநர் பேரவையால்/ சபையினால் நியமிக்கப்பட்ட நிலையியற் குழுக்களின் வழிகாட்டு நெறிகளின் மூலம் நிறைவேற்றப்படுதல் வேண்டும். அத்தகைய குழுக்கள், பொது நிர்வாகம், கல்விசார் நிர்வாகம், நிதிசார் முகாமை மற்றும் கற்கை நெறி சார் மற்றும் சேமநலன் விடயங்கள் தொடர்புபட்ட எல்லாப் பிரச்சினைகளிலும் கருத்தைத் தெரிவித்தல் வேண்டும். | (அ) பாடங்களின் பிரதான பிரிவுகள் மற்றும் ஒவ்வொரு பிரிவிற்கும் பொறுப்பாகவிருக்கும் அலுவலர்கள் உள்ளடங்கலாக ஒழுங்கமைப்பு வரைபடம்.<br>(ஆ) கூட்டிணைப்பு/செயல்நுணுக்கத் திட்டம்<br>(இ) கம்பெனியிலுள்ள கடமைகளின் பட்டியல்கள், அத்தகைய கடமைகளைப் புரிவதற்குத் தேவைப்படும் தகைமைகள், சேவை நிபந்தனைகள், மற்றும் உரித்துடைமைகள், |

**அட்டவணை** I (தொடர்ச்சி)

| நிரல் *I*<br>*செயற்பாட்டு இடப்பரப்பின் விவரணம்* | நிரல் *II*<br>*தேவைப்படுத்தப்பட்ட சான்றை/தகவலை இனங்காணல்* |
|---|---|
| | ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வு நடவடிக்கை முறைகள் அத்துடன் வேறு ஏற்புடையற்பாலதான விடயங்கள் உள்ளடங்கலாக ஒவ்வொரு கல்வி சாரா நிலையிலுள்ளவர்களின் பதவி அணி,நிலைகள், ஆட்சேர்ப்புத் திட்டங்கள்.<br><br>(ஈ) கூட்டிணைப்பு/ செயல்நுணுக்கத் திட்டத்திற்கு இணக்கமாகத் தயாரிக்கப்பட்ட பணியாட்தொகுதி அபிவிருத்தி திட்டம் மற்றும் கல்விசாராத் தரங்களின் அடுத்துறள்புத் திட்டம் உள்ளடங்கலாக தயாரிக்கப்பட்ட மனிதவள அபிவிருத்தித் திட்டம்.<br><br>(உ) நிர்வாகத்தின் ஆவணப்படுத்தப்பட்ட நடவடிக்கை முறைகள் மற்றும் பணியாட்தொகுதியின் கடமைகளின் பட்டியல்கள்.<br><br>(ஊ) உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மற்றும் வெளியகக் கணக்காய்வுத் தகவல் உள்ளடங்கலாக கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைப் பொறிமுறை.<br><br>(எ) ஏற்கனவே தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு விண்ணப்பதாரர் நிறுவகம்/நிறுவனத்தின் விடயத்தில் தொடர்ந்து வருகின்ற கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள்.<br><br>(ஏ) முகாமைக்கு இயைபாக இருக்கக் கூடியவாறான வேறு ஏதேனும் சான்று/ஆவணம். |
| 3. **நிதிசார் இயலுமாந்தன்மை**: நிறுவகமானது அதனது நிதிசார் ஆற்றலையும் இயலுமாந்தன்மையையும் தெளிவாக விபரித்துக் காட்டுதல் வேண்டும். மேலும் அது உறுதிப்பாட்டை வழங்க வேண்டும் என்பதுடன், எதிர்பாராச் செலவினங்கள்/ அவசரகால நிலைமைகள் என்பவற்றுக்கு முகங்கொடுக்கும் விதத்திலும் மற்றும் நிறுவகமானது அதனது தொழிற்பாடு மற்றும் நடவடிக்கைகளை இடைநிறுத்த நேர்ந்தால் மாணவர்களுக்கும் ஊழியர்களுக்குமான நட்டஈட்டைச் செலுத்துவதற்காகவும் பிணை கொடுத்தலும் வேண்டும். | (அ) இலங்கையில் ஏற்கனவே தொழிற்படுகின்ற ஒழுங்கமைப் பொன்று தொடர்பில் விண்ணப்பதாரக் கம்பெனியின் இறுதி ஐந்து தொடர்ச்சியான ஆண்டுகள் வரைக்குமான ஐந்தொகையும் இலாப நட்டக் கூற்றுக்களும் உட்பட கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டு நிதிசார் கூற்றுக்கள்.<br><br>(ஆ) புதிதாகத் தாபிக்கப்பட்ட விண்ணப்பதாரக் கம்பெனி ஒன்று தொடர்பில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய கூற்றுக்கள்.<br><br>(இ) வங்கியாளர்களது விபரங்கள் மற்றும் உரிய வங்கிகளின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களினால் சான்றுப் படுத்தப்பட்ட இறுதி மூன்று தொடர்ச்சியான ஆண்டுகளுக்கான வங்கி மீதிகள்.<br><br>(ஈ) அடுத்த தொடர்ச்சியான ஐந்து ஆண்டுகளுக்கான நிதிசார் எதிர்வு கூறலை அடிப்படையாகக் கொண்ட கூட்டுறவுத் திட்டம்/செயல்நுணுக்கத் திட்டம்.<br><br>(உ) நிதிசார் கிடைப்பனவிற்கு இயைபாக இருக்கக்கூடிய வாறான வேறு ஏதேனும் சான்று/ஆவணம். |

**அட்டவணை** I (தொடர்ச்சி)

| *நிரல் I*<br>*செயற்பாட்டு இடப்பரப்பின் விவரணம்* | *நிரல் II*<br>*தேவைப்படுத்தப்பட்ட சான்றை/தகவலை இனங்காணல்* |
|---|---|
| 4. **பௌதீக வளங்கள்** - நிறுவகமானது உயர் கல்வி நிறுவகமொன்றாகத் தொழிற்படுவதற்கு தேவைப்படும் எல்லாப் பௌதீக வளங்களையும் கொண்டிருத்தல் வேண்டும். நிறுவகமானது கல்விசார் நடவடிக்கைகளுக்காக நிர்வாகக் கட்டிடத் தொகுதியையும், அதற்கான வசதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும். இவை நிர்வாகக் கட்டிடத் தொகுதி/கட்டிடம், விரிவுரை அறைகள், கேட்போர் கூடம், மாணவர் போதனை மற்றும் பயிற்சி ஆய்வுகூடங்கள், நூலகம், கணினி வசதிகள் விளையாட்டுக்கள் மற்றும் பொழுதுபோக்கு வசதிகள், உணவுச்சாலையொன்று மற்றும் இளைப்பாறும் அறைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன;<br><br>அத்துடன் உலர் தொழில் கற்கை நெறிகளின் விடயத்தில், நிறுவனமானது, விடயத்திற்கேற்ப, அதனது சொந்தப் பயிற்சி நிர்வாக வசதிகள்/வைத்தியசாலையைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது பொருத்தமான பயிற்சி நிர்வாக வசதிக்கு/ வைத்தியசாலைக்கு அனுக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். பயிற்சி வசதி/வைத்தியசாலை அரசாங்க முயற்சி ஒன்றாகவிருப்பின் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றின் மூலம் பங்குடைமை ஒழுங்குபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் உடன்படிக்கை ஒன்றினால் நடைமுறைப் படுத்தப்படுதலும் வேண்டும். | (அ) நிறுவனம்/ நிறுவகம் தொழிற்பட வேண்டிய காணி/ காணிகள் மற்றும் கட்டிடம்/கட்டிடங்கள் என்பவற்றின் குத்தகை உடன்படிக்கை/ உடன்படிக்கைகள் அல்லது உறுதி/ உறுதிகள் (விண்ணப்பதாரர் விடயம் பற்றிய மீளாய்வு பூர்த்தி செய்யப்படுவதற்கு முன்னர் இவ் வாவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்).<br>(ஆ) நிறுவனத்தின் அல்லது நிறுவகத்தின் உட்கட்டமைப்பு பற்றிய பிரதான திட்டம்.<br>(இ) பங்காளி நிறுவனத்துடனான புரிந்துணர்வு வாசகங்கள் மற்றும் உடன்படிக்கைகள் (அதாவது, போதனா வைத்தியசாலை/பயிற்சி நிறுவனங்கள்)<br>(ஈ) நிர்வாகம் மற்றும் கல்விசார் பீடங்கள்/ அலகுகளுக்கு கிடைக்கக்கூடியதாகவுள்ள பௌதீக வசதிகள் -<br>(i) தொழிற்பயிற்சி வகுப்புகளுக்கான விரிவுரை மண்டபங்கள், தனிப் பயிற்சி அறைகள், ஆய்வு கூடங்கள் மற்றும் வசதிகள்;<br>(ii) மருத்துவ சிகிச்சை/ உள்ளகப் பொறித் தொகுதிப் பயிற்சி.<br>(உ) நூலகம், கணினி நிலையம்/அலகு, உடற்பயிற்சி நிலையம், பொழுதுபோக்கு வசதிகள், சிற்றுண்டிச்சாலையொன்று மற்றும் இளைப்பாறும் அறைகள் மற்றும் இளைப்பாறும் அறைகள் முதலியன போன்ற பொது வசதிகள்.<br>(ஊ) பௌதீக வளங்களுக்கு இயைபாக இருக்கக்கூடியவாறான வேறு ஏதேனும் சான்று/ஆவணம். |
| 5. **கல்விசார் திட்டமிடல், மற்றும் அபிவிருத்தி செய்முறை மற்றும் தர உறுதிப்பாட்டு முறைமை** - நிறுவனமானது SCAQA இனால் வரையறுக்கப்பட்ட நியமங்கள் மற்றும் தர உறுதிப்பாட்டுக் கட்டளைக்கற்கைகள் என்பனவற்றை நிறைவு செய்யுமாறு கல்விசார் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடுவதற்கும் நடாத்துவதற்குமான தனது ஆற்றலைத் தெளிவாக விபரித்துக் காட்டுதல் வேண்டும். இது உள்ளக மற்றும் வெளியக தர உறுதிப்பாட்டுப் பொறிமுறைகள் மற்றும் நடவடிக்கை முறைகளுக்கான நிறுவனரீதியான ஏற்பாடுகளையும், கல்விசார்/அபிவிருத்தி மற்றும் திட்டமிடல், போதனை செய்தல்/ பயிற்சியளித்தல் விடய அபிவிருத்தி மற்றும் கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களையும் பரீட்சைகளையும் நடாத்துவதற்கான தகைமைபெற்ற கல்வியாளர்களின் மற்றும் தொழில்நுட்பப் பணியாட்டொகுதியினரின் கிடைக்கக் கூடியதாயிருக்கின்ற தன்மையையும் உள்ளடக்குகின்றது. | (அ) தற்போது முனையப்பட்ட கல்விசார் கற்கை நிகழ்ச்சித் திட்டங்களின் பட்டியல்.<br>(ஆ) கல்விசார் கற்கை நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய விபரங்களை வழங்கும் விபரக்கொத்துக்கள்/கைநூல்கள்/ சிற்றேடுகள்.<br>(இ) கல்விசார் கற்கை நிகழ்ச்சித் திட்டங்களின் சிறப்பு மற்றும் தகைமை வரைபுச் சட்டகம்.<br>(ஈ) தனிப்பட்ட கல்விசார் கற்கை நிகழ்ச்சித் திட்டங்களின் தகைமையின் விளக்கவுரைகள்.<br>(உ) கல்விசார் கற்கை நிகழ்ச்சித் திட்டத்தின் விடயத்தின் தகுதியை நிர்ணயிக்கும் கூற்றுக்கள்.<br>(ஊ) கற்கை நெறிகள்/ பாடப் பகுதிகள் என்பவற்றின் உள்ளடக்கங்களின் விபரங்கள். |

**அட்டவணை** II *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br><br>*செயற்பாட்டு இடப்பரப்பின் விவரணம்* | *நிரல் II*<br><br>*தேவைப்படுத்தப்பட்ட சான்றை/தகவலை இனங்காணல்* |
|---|---|
| | (எ) உள்ளக மற்றும் வெளியக தரவரைவுச் சட்டகம் மற்றும்/ நடவடிக்கை முறைகள்.<br><br>(ஏ) தொழில்முறைக் கோவைகள்<br><br>(ஐ) மனிதவள அபிவிருத்தித் திட்டம்<br><br>(ஒ) கல்விசார் திட்டம் மற்றும் அபிவிருத்திக்கு இயைபாக இருக்கக் கூடியவாறான வேறு ஏதேனும் ஆவணம் அல்லது சான்று. |
| 6. **பணியாட்தொகுதியின் கல்விசார் மற்றும் ஆராய்ச்சித் திறமைகள்** - (முழுவதுமாக) நிறுவனம் ஆனது நிரந்தர அடிப்படையில் அல்லது நீண்டகால ஒப்பந்தங்களின் அடிப்படையில் ஆகக் குறைந்த எண்ணிக்கையான கல்விசார் பணியாட்டொகுதியினரைக் கொணடிருத்தல் வேண்டும். கல்விசார் பணியாட்டொகுதியானது போதுமான கற்பித்தல் அனுபவத்துடன் சேர்த்து இயைபான துறையிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் இருந்து பெறப்பட்ட அடிப்படை மற்றும் பட்டப்பின் படிப்புத் தகைமைகளைக் கொணடிருத்தல் வேண்டும். அவர்கள் கல்விசார் மற்றும் கல்விசாரா நிலைகள், பொருத்தமான பணியாட்டொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், தொடர்ச்சியான உயர் தொழில் அபிவிருத்தி என்பவற்றுக்கான தகவல் மற்றும் திட்டம் ஒன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும். மேலும், கல்விசார் பணியாட்டொகுதியானது திறமையைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் ஆராய்ச்சியிலும் அபிவிருத்தியிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளமையை விபரித்துக் காட்டுதலும் வேண்டும். | (அ) கல்விசார் பதவியணி நிலைகள்<br><br>(ஆ) பணியாட்டொகுதியின் கல்விசார்/உயர்தொழில் தகைமைகள்.<br><br>(இ) கல்விசார் பணியாட்தொகுதியின் பணியாட்டொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்/தொடர்ச்சியான உயர்தொழில் அபிவிருத்தி மற்றும் அடுத்துறள்புத் திட்டம் உட்பட மனித வள அபிவிருத்தித் திட்டம்.<br><br>(ஈ) பணியாட்டொகுதி/மாணவர் விகிதாசாரம்.<br><br>(உ) ஆராய்ச்சிக் குழுக்கள் போன்ற ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான நிறுவனம்சார் ஒழுங்குகள்.<br><br>(ஊ) கைத்தொழிலுடன் பணியாட்டொகுதியினர் ஒருவரை ஒருவர் புரிந்துணர்வுடன் செயலாற்றுவதற்கான சான்று.<br><br>(எ) ஆராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி வெளியீடுகளின் தரவுத் தளம்.<br><br>(ஏ) பணியாட்டொகுதியின் கல்விசார் ஆராய்ச்சி மற்றும் திறன்கள் வெளிக்காட்டப்பட்டிருக்கின்ற நிறுவகத்தின் ஆண்டறிக்கைகள்.<br><br>(ஐ) பணியாட்டொகுதியின் ஆற்றலுக்கு இயைபாக இருக்கக்கூடியவாறான வேறு ஏதேனும் சான்று அல்லது ஆவணம். |

ml;ltiz II

விடயம் சார் மீளாய்வுக்கான வழிகாட்டு நெறிகள்

| *நிரல் I*<br>*செயற்பாட்டு இடப்பரப்பின் விவரணம்* | *நிரல் II*<br>*தேவைப்படுத்தப்பட்ட சான்றை/தகவலை இனங்காணல்* |
|---|---|
| 1. ***அனுமதிக் கட்டளைக்கற்கைகள் மற்றும் நடவடிக்கை முறை*** - *நிறுவனமானது பட்டதாரி நிகழ்ச்சித்திட்டம், மதிப்பாய்வுக் கட்டளைக்கற்கைகள் மற்றும் தெரிவு செய்தல் நடவடிக்கைமுறை என்பவற்றுக்கான அனுமதித் தகைமைகள் தொடர்பான விபரங்களை சமர்ப்பித்தல் வேண்டும். நிறுவனத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட நடவடிக்கை முறையானது பட்டதாரிப் பயிலுநர் கற்கை நிகழ்ச்சித் திட்டங்களுக்கான தகுதியை தீர்மானிப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் கடைப்பிடிக்கப்பட்ட ஆகக் குறைந்த அனுமதித் தகைமையுடன் ஒத்திசைதல் வேண்டும். மேலும் தெரிவு செய்தல் நடவடிக்கை முறையானது உண்மையான மதிப்பீடு மற்றும் வெளிப்படையாந்தன்மையின் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.* | (அ) *அனுமதிக்கான கட்டளைக்கற்கைகள் மற்றும் மதிப்பீடு செய்தல் நடவடிக்கை முறை.*<br>(ஆ) *முன்னர் அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் பற்றிய விபரங்கள்.*<br>(இ) *விண்ணப்பித்தோரின் எண்ணிக்கை, தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை, கற்கைக் காலப் பகுதியின் மேல் தடுத்து வைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை/ பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கை (கடந்த 5 வருடங்களின் போது) உள்ளடங்கலாக ஆகக்குறைந்த அனுமதி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஒத்திசைவாக கல்வியாளர்களின் முன்னேற்றம் பற்றிய அறிக்கைகள்.* |
| 2. ***கல்விசார் நிகழ்ச்சித்திட்டம்*** - *நடாத்தப்படும் கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்கள் தேசிய தேவைகளுக்கு இயைபான தன்மையைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்கள் நிறுவகத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணியுடன் இசைந்தொழுகுதல் வேண்டும் என்பதுடன், நிறுவகத்திற்குக் கிடைக்கக் கூடிய பௌதீக மற்றும் அதன் மனித வளங்கள் மற்றும் அனுபவத்துடன் ஒத்திருத்தலும் வேண்டும். கற்கை நிகழ்ச்சித் திட்டமானது செம்மையான கோட்பாடுகள் மீது அபிவிருத்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அதாவது -*<br>(i) *தகைமைகளின் விபரணங்கள்;*<br>(ii) *திறமை மற்றும் தகைமையின் விபரணங்கள்;*<br>(iii) *கற்கை நெறிகள்/ பாடப் பகுதிகள் என்பவற்றின் உட்கருதுதப்பட்ட கற்றல் பெறுபேறுகள்;*<br>(iv) *கற்கை நெறிக் காலம் முடிவடைதலிலான மதிப்பீடு/ தொடர்ச்சியான மதிப்பீடு என்பவற்றை உள்ளடக் குகின்றதான மதிப்பீட்டு முறைகள், அத்துடன் ;* | (அ) *கற்கை நிகழ்ச்சித் திட்டம்*<br>(ஆ) *திறமை மற்றும் தகைமை வரைவுச் சட்டகம்.*<br>(இ) *தகைமைகளின் விபரணங்கள்*<br>(ஈ) *நிகழ்ச்சித் திட்டத்தினதும் தனிப்பட்ட கற்கை நெறிகளினதும் உட்கருதுப்பட்ட கற்றல் பெறுபேறுகள்.*<br>(உ) *கற்கை நெறிகளின்/பாடப்பகுதிகளின் உள்ளடக்கத்தின் விபரங்கள்.*<br>(ஊ) *போதித்தல் மற்றும் கற்றல் முறைகளும்.*<br>(எ) *கிரமமான/ ஒப்பந்தம்/ வருகைதரும் அடிப்படையில் போதித்தல் குழாம்.*<br>(ஏ) *ஆய்வுகூடம்/ தொழில் முறை பயிற்சி/ மருத்துவ வகுப்புக்கள் மற்றும் தனிப்பட்ட ஆய்வுகூட/ தொழில்முறைப் பயிற்சிகள் மற்றும் மருத்துவ அமர்வுகள் பற்றிய அறிவுறுத்தல் கையேடுகள்.* |

**அட்டவணை** (தொடர்ச்சி)

| நிரல் I<br>செயற்பாட்டு இடப்பரப்பின் விவரணம் | நிரல் II<br>தேவைப்படுத்தப்பட்ட சான்றை/தகவலை இனங்காணல் |
|---|---|
| (v) மரபு வழியான மற்றும் நவீன ICT அடிப்படையிலான கற்றல் சாதனங்களின் சிறந்த விகிதத்துடன் மாணவரை இலக்காகக் கொண்ட, இணைந்து போதித்தல் மற்றும் கற்றல். | (ஐ) மதிப்பீடுகளிற்கான விதிகளும் ஒழுங்கு விதிகளும்.<br>(ஒ) துணைச் சட்டங்கள்.<br>(ஓ) கடந்தகால வினாத் தாள்கள் மற்றும் விடைத் தாள்கள் (கிடைக்கக் கூடியதாக இருப்பின்)<br>(ஔ) பட்டதாரி வகுப்புகளின் பெறுபேறுகள் (கிடைக்கக் கூடியதாக இருப்பின் கடந்த ஐந்து வருடங்களுக்கானவை) |
| 3. **நியமங்கள், தர உறுதிப்பாட்டு பொறிமுறை மற்றும் நடைமுறைகள்** - நிறுவகமானது செயற்பாட்டிலுள்ள உள்ளக மற்றும் வெளியக தர உறுதிப்பாட்டுப் பொறிமுறைகள் மற்றும் நடவடிக்கை முறைகளையும் தெளிவாக விபரித்துக் காட்டுதல் வேண்டும். நடாத்தப்படும் கற்கை நெறிகள் உயர்தரத்தின வாகவும் தேசிய மற்றும் சர்வதேச நியமங்களை ஈடுசெய்பவையாகவும் மற்றும் இயைபான நியமங்களுடனும் தர நிர்ணயக் கூற்றுக்களுடனும் இசைந்தொழுகுபவையாகவும் இருத்தல் வேண்டும். | (அ) உள்ளகத் தர உறுதிப்பாட்டு பொறிமுறை மற்றும் நடவடிக்கை முறைகள்.<br>(ஆ) வெளியக தர உறுதிப்பாட்டு பொறிமுறை மற்றும் நடவடிக்கை முறைகள்.<br>(இ) விடயத்தின் தர நிர்ணயக் கூற்று.<br>(ஈ) திறமை மற்றும் தகைமை வரைபுச் சட்டகம்.<br>(உ) தகைமைகளின் விபரணங்கள்<br>(ஊ) மாணவர்களுக்கும் பணியாட்டொகுதிக்குமான தொழில் முறைக் கோவைகள்.<br>(எ) வினாக்கொத்து மூலமான மாணவர்களின் கருத்துக்களும் கருத்துரைகளும்.<br>(ஏ) துறை சார்ந்தவர்களின் அவதானிப்புகள்.<br>(ஐ) தொழிற் சந்தை அளவீடும் மற்றும் தொழில் தருநர் கருத்துக்களும். |
| 4. **பணியாட்டொகுதியின் கல்விசார் மற்றும் ஆராய்ச்சித் தகைமைகள்** - (கற்கை நெறிகளுக்கும் பயிற்சிகளுக்கும் குறிப்பாக வரையறுக்கப்பட்ட) பணியாட்டொகுதியானது போதுமான போதனை அனுபவத்துடன் சேர்த்து இயைபான துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களிலிருந்தான தேவைப்படுத்தப்பட்ட அடிப்படை மற்றும் பட்டப்பின் படிப்புத் தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும். அவர்கள் உயர்கல்வி நிறுவனம் ஒன்றில் போதிக்கும் முகமாக அவர்களைப் பழக்குவதற்குப் பொருத்தமான பணியாட்தொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை பின்பற்றியிருத்தலும் வேண்டும். மேலும் கல்விசார் பணியாட் தொகுதியினர் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், விபரித்துக் காட்டுதலிலும் ஆராய்ச்சியிலும் அபிவிருத்தியிலும் தொடர்ச்சியாக ஈடுபடுதலும் வேண்டும். | (அ) கிரமமான மற்றும் வருகைதரும் பணியாட்டொகுதியின் கல்விசார் தகைமைகள்.<br>(ஆ) தேவைப்படுத்தப்பட்ட அடிப்படை மற்றும் பட்டப்பின் படிப்பு பணியாட்டொகுதியில் தேவைப்படுத்தப்பட்ட சிறப்புத் தேர்வுகளின் கிடைப்பனவு.<br>(இ) விதித்துரைக்கப்பட்ட ஆட்சேர்ப்புக் கட்டளைக்கற்கைகள், மற்றும் கல்விசார் பணியாட்டொகுதியின் வேலை விபரணங்கள்.<br>(ஈ) பணியாட்டொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் சேவையிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.<br>(உ) நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆராய்ச்சி பற்றிய தரவுத் தளம்.<br>(ஊ) பணியாட்டொகுதி மூலமான ஆராய்ச்சி வெளியீடுகள் பற்றிய தரவுத் தளம்.<br>(எ) கைத்தொழிலுடனான புரிந்துணர்வுச் செயற்பாடுகள் மற்றும் ஆராய்ச்சித் தகவலைப் பரப்பும் முறைகள். |

**அட்டவணை** (தொடர்ச்சி)

| நிரல் I<br>செயற்பாட்டு இடப்பரப்பின் விவரணம் | நிரல் II<br>தேவைப்படுத்தப்பட்ட சான்றை/தகவலை இனங்காணல் |
|---|---|
| 5. **கற்கை நிகழ்ச்சித் திட்டத்திற்கான குறிப்பான போதித்தல் மற்றும் பயிற்சி வசதிகள்** - நிறுவகமானது, குறிப்பாக வரையறுக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தை முனைவதற்கு தேவைப்படுத்தப்பட்ட பௌதீக வசதிகள் எல்லாவற்றையும் தாபித்திருத்தல் வேண்டும். பட்ட நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை முனைகின்றதான பீடம்/ கூறு, நிர்வாகக் கட்டிடத் தொகுதியையும், கல்விச் செயற்பாடுகளுக்கான வசதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும். இவை நிர்வாகக் கட்டிடத் தொகுதி/கட்டிடம், விரிவுரை அறைகள், கேட்போர் கூடம், மாணவர் போதித்தல் மற்றும் பயிற்சி ஆய்வு கூடங்கள், நூலகம், கணினி வசதிகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. அத்துடன் பொது வாழ் வசதிகள், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் உணவுச்சாலை, மற்றும் ஓய்வு எடுக்கும் அறைக்கான அணுகுகையைக் கொண்டிருத்தல் வேண்டும். உயர் தொழில் கற்கை நெறிகளின் விடயத்தில், நிறுவனமானது அதனது சொந்தப் பயிற்சி வசதி/ வைத்தியசாலையைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது விடயத்திற்கேற்ப பொருத்தமான போதனை வசதி/ வைத்தியசாலை ஒன்றிற்கான அணுகுகையையும் கொண்டிருத்தல் வேண்டும். பயிற்சி வசதி/வைத்தியசாலை ஆனது அரசாங்க முயற்சி ஒன்றாக இருப்பின், அப்பங்குடைமையானது புரிந்துணர்வு ஒப்பந்தம் ஊடாக விதிமுறைப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் உடன்படிக் கைகள் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டிருத்தலும் வேண் டும். எந்த மாணவர்களுக்கு மருத்துவப் பயிற்சி வழங்கப்பட் டதோ அந்த மாணவரின் அணுகுகையைக் கொண்டிருக்கும் போதனா வைத்தியசாலை இலங்கை மருத்துவ பேரவை யினால் விதித்துரைக்கப்பட்ட நியமங்களுக்கு இசைந்தொழுகுதல் வேண்டும். | (அ) பட்டதாரி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்புடையற்பாலதான ஆய்வுகூட வேலை/கள வேலை/செயல் முறை/மருத்துவம் தொடர்புபட்ட வசதிகளும் மற்றும் ஆய்வுகூடங்கள்/ மருத்துவப் பயிற்சி வசதிகளின் கிடைப்பனவு.<br>(ஆ) கல்விசார் ஆதரவுப் பணியாட்டொகுதியும் அவர்களுடைய தகைமைகளும் அனுபவமும்.<br>(இ) ஆய்வுகூட வேலை/செயல்முறை வகுப்புக்கள்/மருத்துவ வேலை என்பவற்றுக்கான சாதனங்கள்.<br>(ஈ) மருத்துவ விஞ்ஞானங்களில் உயர்தொழில் மட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் விடயத்தில், மருத்துவம் போதித்தல்/செயல் முறைக்காகவும் முன்னேற்றமடைந்த மருத்துவ/ ஆய்வுகூட நுட்பங்களில் அனுபவத்தைப் பெறுவதற்கா கவும் பேராசிரியர்களைக் கொண்ட கூறு அலகுகளுட னான கூடிய போதனா வைத்தியசாலை ஒன்றின் கிடைக்கக்கூடிய தன்மை.<br>(உ) பங்காளி நிறுவனங்களுடனான புரிந்துணர்வு வாசகங்கள் மற்றும் உடன்படிக்கைகள் (அதாவது போதனா வைத்தியசாலைகள்/பயிற்சி நிறுவனங்கள்). |
| 6. **மாணவர் ஆதார சேவை மற்றும் சேமநலம்** - கல்விசார் சூழலானது கல்விசார் செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் மாணவர்களையும் பணியாட்டொகுதியினரையும் சௌக்கிய மாக இருக்கச் செய்வதற்கு உகந்ததாக இருத்தல் வேண்டும். மாணவர்கள் ஆற்றுப்படுத்தல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம், கல்விசார் மற்றும் மாணவர் ஆலோசனை முறைமை, தொழில் வழிகாட்டுகை முதலியன போன்ற பொறிமுறையூடாக நிகழ்ச்சித் திட்டத்தினுள் நுழையும் நாளிலிருந்து, வழிகாட்டப் படல் வேண்டும். கல்வி சாராத செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு மாணவர்களுக்கான பொறிமுறை இருத்தல் வேண் டும். நிறுவனங்களின் கல்விசார் நியமங்களை முன்னேற்றும் முகமாக பங்களிப்புச் செய்வதனை ஊக்கப்படுத்துதலை பணியாட்டொகுதியினருக்கு இயலச் செய்வதற்கும் மற்றும் மாணவர்களை இலக்காகக் கொண்ட கற்றலுக்காகவும் அவர்களின் சேமநலனின் மேம்பாட்டிற்காகவும் மாணவர்களை தன்னிச்சையாக வழிகாட்டுவதற்குமென போதுமான வளங்கள் மற்றும் சேமநலன் என்பன பணியாட்தொகுதியினருக்கும் வழங்கப்படுதல் வேண்டும். | (அ) கற்கை நிகழ்ச்சித் திட்டம், மாணவர் ஆதார சேவைகள் மற்றும் வசதிகள் பற்றிய அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகத்திலான தகவல்.<br>(ஆ) மாணவர் பாட விளக்க அறிவிப்பு/கைநூல்.<br>(இ) முகாமைத் தகவல் முறைமைகள் மற்றும் நடவடிக்கை முறைகள்.<br>(ஈ) போதித்தல்/ செயல் முறை/ மருத்துவ மற்றும் தனிப் பயிற்சி அட்டவணைகள்<br>(உ) கல்விசார் வழிகாட்டுகை/மற்றும் மாணவர் ஆலோசனைச் சேவைகள்.<br>(ஊ) உணவுச்சாலைகள், விடுதிகள், நூலகம், கணினி வசதிகள் முதலியவற்றின் கிடைக்கக் கூடிய தன்மை. |

09-85

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.